கஞ்சா விற்பனையை தடுக்க தீவிர நடவடிக்கை

மேற்கு மண்டல ஐஜி செந்தில்குமார் தகவல்

கோவை, செப்.19: தமிழக மேற்கு மண்டல ஐஜி செந்தில்குமார் நேற்று கூறியதாவது:

தமிழக மேற்கு மண்டல மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு, குற்றம் தடுப்பு பணிகள் சிறப்பாக நடக்கிறது. கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கூலி வேலைக்காக வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவு தொழிலாளர்கள் வந்து செல்கிறார்கள். இவர்களில் சிலர், சொந்த ஊரில் இருந்து கஞ்சா கடத்தி வருவதாக புகார் பெறப்பட்டது. இதைத்தடுக்க ரயில் நிலையங்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் தகவல்கள் அடிப்படையில் சோதனை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிகளவு கஞ்சா பறிமுதல், குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட, மாநில எல்லை செக்போஸ்ட்களில் கண்காணிப்பு பணிகள் நடக்கிறது. தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்து கண்காணிக்கும் பணிகள் ஏற்கனவே தீவிரமாக நடக்கிறது. குற்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் பிரதான செக்போஸ்ட் வழியாக தான் செல்வார்கள் என சொல்ல முடியாது. அந்தந்த பகுதி எஸ்.பிக்கள் மேற்பார்வையில் வெவ்வேறு பகுதிகளிலும் சோதனை நடத்தப்படுகிறது.

கிராமங்களின் வேகமான வளர்ச்சி, புதிய தொழில் நிறுவனங்கள் போன்றவற்றால் கிராம பகுதிகளில் வேகமாக முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இங்கு புதிய குடியிருப்புகளும் அதிகமாகி வருகிறது. கடந்த காலங்களில் மேற்கு மண்டல மாவட்டங்களில் கூடுதல் போலீஸ் ஸ்டேஷன்கள் அமைப்பது தொடர்பாக கோரிக்கைகள் விடப்பட்டிருக்கிறது.

எந்தந்த பகுதிக்கு போலீஸ் ஸ்டேஷன் தேவை, அதிக மக்கள் தொகை, அதிக பரப்பு கொண்ட பகுதிகளை பிரிப்பது குறித்தும், தேவையான இடங்களில் போலீஸ் ஸ்டேஷன் அமைப்பது குறித்தும் ஆலோசனை அளவில் இருக்கிறது. குறை தீர்ப்பு கூட்டங்களில் பெறப்படும் புகார் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உயர் அதிகாரிகள் நேரடியாக மனுக்களை பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மேற்கு மண்டல மாவட்டங்களில் கிராமங்கள் அதிகமாக இருக்கிறது. இங்கு பெரிய அளவிலான குற்றங்கள் ஏதுமில்லை. விபத்து தவிர்க்க, சாலை பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்த தீவிரம் காட்டப்பட்டு வருகிறது.

“உங்களை தேடி.. உங்கள் ஊரில்..” சிறப்பு திட்டத்தின் கீழ் ஆய்வு

தமிழக முதல்வரின் “உங்களை தேடி உங்கள் ஊரில்...” என்னும் சிறப்பு திட்டத்தின் கீழ், கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 17வது வார்டுக்கு உட்பட்ட கவுண்டம்பாளையம் குழந்தைகள் மையத்தில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அருகில், மேற்கு மண்டல தலைவர் தெய்வானை, துணை கலெக்டர் மது அபிநயா (பயிற்சி), வார்டு கவுன்சிலர் சுபஸ்ரீ மற்றும் பலர் உள்ளனர்.

கோவை, செப். 19: தமிழக முதல்வரின் “உங்களை தேடி.. உங்கள் ஊரில்..” என்ற சிறப்பு திட்டத்தின் கீழ், கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 33வது வார்டுக்கு உட்பட்ட கவுண்டம்பாளையம், ராமுகுட்டி லே-அவுட் பகுதியில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், 17வது வார்டுக்கு உட்பட்ட கவுண்டம்பாளையம், டி.வி.எஸ் நகரில் மழை நீர் வடிகால் சீரமைத்தல் தொடர்பாகவும் மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடம் மற்றும் அங்குள்ள சுகாதார நிலையத்தின் செயல்பாடு ஆகியவற்றையும் ஆய்வுசெய்தார். பின்னர், 17வது வார்டுக்கு உட்பட்ட கவுண்டம்பாளையம் குழந்தைகள் மையத்தினை ஆய்வு செய்தார். அங்குள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் பற்றியும் ஆய்வு செய்தார். தொடர்ந்து, அங்குள்ள ரேஷன் கடையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, உணவு பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்த பதிவேடுகளையும் ஆய்வு செய்தார்.

கவுண்டம்பாளையம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி வளாகத்தில் ரூ.7.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பள்ளி கழிப்பறை கட்டிடம், கவுண்டம்பாளையம் எரிவாயு தகனமேடை வளாகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அடிப்படை வசதி, கவுண்டம்பாளையம் ராம் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டப்பணி ஆகியவை குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மேற்கு மண்டல தலைவர் தெய்வானை, துணை கலெக்டர் மது அபிநயா (பயிற்சி), கல்விக்குழு தலைவர் மாலதி, உதவி செயற்பொறியாளர் சவிதா, மண்டல சுகாதார அலுவலர் வீரன், உதவி நகரமைப்பு அலுவலர் காந்திமதி, உதவி பொறியாளர்கள் ராஜேஷ் வேணுகோபால், ஹரிபிரசாத், சுகாதார ஆய்வாளர் சந்திரசேகர், கவுன்சிலர்கள் கிருஷ்ணமூர்த்தி, சுபஸ்ரீ, சம்பத் மற்றும் பலர் உடனிருந்தனர்.

டேராடூன் ராணுவ கல்லூரி நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

கோவை, செப். 19: டேராடூனில் உள்ள ராஷ்ட்ரிய இந்திய ராணுவ கல்லூரியில் வரும் 2025 ஜூலை மாதம் துவங்கும் 8-ம் வகுப்பில் சேருவதற்கான நுழைவுத்தேர்வு வரும் டிசம்பர் 1ம் தேதி நடக்கிறது. இதற்கு விண்ணப்பிக்கும் பெற்றோர் தமிழ்நாட்டில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். மாணவர் 1.07.2025 அன்று 11 வயது 6 மாதம் நிரம்பியவராகவும், 13 வயது அடையாதவராகவும் இருக்க வேண்டும். இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. ராணுவ கல்லூரியில் சேர அனுமதிக்கும் போது 1.07.2025ல் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 7ம் வகுப்பு படிப்பவராக அல்லது 7ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். விண்ணப்பம் மற்றும் தகவல் குறிப்பேட்டினை கமாண்டன்ட் ராஷ்ட்ரிய இந்தியன் மிலிடரி கல்லூரி டேராடூன், உத்தரகாண்ட் பின்கோடு எண் 248003 என்ற முகவரிக்கு உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பொதுப்பிரிவினருக்கு ரூ.600, பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர்கள் சாதி சான்றிதமுடன் ரூ.555க்கான கேட்பு காசோலை அனுப்பியும் அல்லது www.rimc.gov.in என்ற இணையதளம் வழியாகவும் விண்ணப்ப படிவம் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயம், பூங்காநகர், சென்னை-600003 என்ற முகவரிக்கு வரும் 30ம் தேதிக்குள் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும்.

சுவாச பிரச்சனை காரணமாக

மாத்திரை சாப்பிட்ட தொழிலாளி சாவு

திருப்பூர், செப். 19: திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை பகுதியை சேர்ந்தவர் முத்து கிருஷ்ணன் (41). இவர், பூலுவபட்டி அம்மன் நகர் பகுதியில் உள்ள ஐஸ் கம்பெனி ஒன்றில் பணி புரிந்து வந்தார். மனைவி மற்றும் மகன்களை பிரிந்து வசித்து வரும் இவர் சுவாச பிரச்சனை காரணமாக கடந்த சில வருடங்களாக அவதிப்பட்டு வந்தார்.

இதற்காக தினமும் மாத்திரை சாப்பிட்டு வந்தார். தொடர்ந்து, சிகிச்சை எடுத்து கொண்டும் குணமாகாததால் விரக்தியில் இருந்தவர் நேற்று முன்தினம் மதியம் அளவுக்கு அதிகமான மாத்திரைகளை சாப்பிட்டு மயக்கம் அடைந்தார். அருகில் இருந்தவர்கள் இவரை மீட்டு திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு 2 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். மனைவி புஷ்பகலா அளித்த புகாரின் அடிப்படையில் திருமுருகன்பூண்டி போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

கோரிக்கை அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

ரீடெய்ல் சென்ட்ரல் & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை சற்றுத்தொலைவில், கலீனா, மும்பை 400098

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (“சட்டம்”) இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டவர் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் (“இஏஆர்சி”) அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அதிகாரப்பூர்வ அதிகாரி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி இருக்கிறார்.
பின்வரும் கடன்தாரர்(கள்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட இங்கே கீழேயும் கொடுக்கப்பட்டதான தொகைகளை திருப்பிச் செலுத்துமாறு கோரியிருக்கிறார். மேற்கூறியது தொடர்பாக, கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்து 60 நாட்களுக்குள், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு இங்கே கீழே குறிப்பிட்ட தொகைகளை, மேற்கூறிய கடன்தாரர்(கள்) மூலம் நிறைவேற்றப்பட்ட பிற ஆவணங்கள்/பத்திரங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கடன் ஒப்பந்தம் கீழ் செலுத்தப்பட வேண்டிய, கீழே குறிப்பிட்ட தேதி(கள்) முதல் பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை, மேற்கூறியக் கோரிக்கை அறிவிப்பில் விவரிக்கப்பட்டவாறான மேற்கொண்டு வட்டியுடன் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கடனீடாக, பின்வரும் சொத்து முறையே மேற்கூறிய கடன்தாரர்(கள்) மூலம் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	பொறுப்பாட்சி & உரிமைமீந்தோர் விவரங்கள்
15	1. திரு.முகமது ரபித் A (கடன்தாரர்), 2. திருமதி.ஷேக்பீவி M (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண்: XMHDCMT00104492	7-06-2024 & Rs. 62,63,402.49/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி 421 & ரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
சொத்தின் விவரங்கள்; அட்டவனை 2: அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கொண்ட சொத்து கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, பொள்ளாச்சி முனிசிபல் டவுண், சுண்ணாம்பு கலவை லிட்டெரி, டி.எஸ்.வார்டு எண்.2, டி.எஸ்.எண்.740/3B (பழைய டி.எஸ்.எண்.740/3) பரப்பளவு 15100 ச.அடி இந்த சொத்து பின்வரும் எல்லைகள் கொண்டுள்ளது. **வடக்கு:** டி.எஸ்.எண்.740/5 **தெற்கு:** 20 அடி கிழக்கு மேற்கு பொது வண்டி பாதை டி.எஸ்.எண்.740/3, **கிழக்கு:** நடராஜ் செட்டியாருக்கு சொந்தமான சொத்து, **மேற்கு:** ஆப்ரஹாம் நாடாருக்கு சொந்தமான சொத்து.			
24	1)திரு.வேல்முருகன் M (கடன்தாரர்), 2)திருமதி.கார்த்திகா V (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LTPRSTH0000036140	26-08-2024 & Rs. 16,81,205.22/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி 447 & எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
சொத்தின் விவரங்கள்; திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுகா, பல்லடம் பஞ்சாயத்து போர்டு, அறுமுதப்பாளையம் மைனர் கார்ப்பரேஷன் நாராணபுரம் கிராமம். எஸ்.எஃப்.எண்.122 P ஏக்கர் 1.50 கிஸ்த் 1.40 எஸ்.எஃப்.எண்.123 P ஏக்கர் 9.20 கிஸ்த் 10.00. இந்த நிலத்தில் மேற்கு-பழனிசாமியின் சொத்து P ஏக்கர் 0.80, வடக்கு- எஸ்.எஃப்.எண்.126. கிழக்கு- எஸ்.எஃப்.எண்.122, தெற்கு- எஸ்.எஃப். எண்.82, இதற்கு நடுவே அளவீடு P ஏக்கர் 2.60, கிஸ்த் 2.30 இந்த நிலத்தில், P ஏக்கர் 2.60 உப பிரிவின்படி எஸ்.எஃப்.எண்.123/1/. ஆகவே மொத்தம் P ஏக்கர் 4.10 கிஸ்த் 3.70 வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. லேஅவுட்டுக்கு ராஜலட்சுமி நகர் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த லேஅவுட் படி மனை எண்.66, அறுமுதப்பாளையம் பஞ்சாயத்து, பல்லடம் தாலுகா, திருப்பூர், தமிழ்நாடு (641664) எல்லைகள் பின் வருமாறு; **வடக்கு-** எஸ்.எஃப்.எண்.126, **தெற்கு**-மனை எண்.63,64,65 **கிழக்கு**-22 அடி வடக்கு-தெற்கு லேஅவுட் சாலை, **மேற்கு**-எஸ்.எஃப்.எண்.124 அளவீடு இதற்கு நடுவே கிழக்கு-மேற்கு வடக்கு பகுதி 86 அடி, தெற்கு பகுதி 49 அடி, வடக்கு-தெற்கு கிழக்கு பகுதி 87 அடி, மேற்கு பகுதி 31 அடி, மொத்தம் 4000 ச.அடி.			
30	1) R பூமிராஜ் (கடன்தாரர்), 2) பூங்கொடி B (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LCMBSTH0000005373	23-08-2024 & Rs. 36,81,230.84/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி 447 & எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
சொத்தின் விவரங்கள்; அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ராஜா தெரு இணை-2 சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, தெலுங்குபாளையம் கிராமம், எஸ். எஃப்.எண்.260, புஞ்சை ஏக்கர் 6.22, இதில் இதற்கு நடுவே பரப்பளவு புஞ்சை ஏக்கர் 0.95. இதில் பரப்பளவு 1309 ச.அடி விற்பனை ஒப்பந்தபடி ஆவண எண்.1539/1987. இதில் பரப்பளவு 255 ச.அடி திரு.ஈஸ்வரனுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது மற்றும் 263 ½ ச.அடி பெறப்பட்டு பரிமாற்ற ஒப்பந்தமாக ஆவண எண்.1893/1989 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மொத்தப் பரப்பளவு 1317 ½ ச.அடி காலி நிலம் **எல்லைகள்; கிழக்கு:** வடக்கு-தெற்கு சாலை மற்றும் நாச்சி முத்து கவுண்டருக்கு சொந்தமான வீடு, **மேற்கு:** ராம மூர்த்திக்கு சொந்தமான நிலம், **வடக்கு:** திரு.சுப்பிரமணியமுதலியாருக்கு சொந்தமான நிலம், **தெற்கு:** 8 அடி அகல கிழக்கு-மேற்கு சாலை மற்றும் திரு.ஈஸ்வரனுக்கு சொந்தமான சொத்து இப்போது திரு.பால்ராஜூக்கு சொந்தமானது.			
34	1) பாலசுப்ரமணியன் V (கடன்தாரர்) 2) வசந்தி பாலசுப்ரமணியன் B (உப-கடன்தாரர்) 3) கனகராஜ் S (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LERDSTH0000039147	26-08-2024 & Rs. 10,02,294.59/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி 459 & எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
சொத்தின் விவரங்கள்; ஈரோடு மாவட்டம், பவானி சார் பதிவு மாவட்டம், பவானி தாலுகா, ஜம்பை கிராமம், மறு சர்வே எண்.778/4, புஞ்சை ஹெக்டேர் 0.76.0 (புஞ்சை ஏக்கர் 1.88 செண்ட்கள்), கிஸ்த் 2.10 (பழைய காசா.500 C) பரப்பளவு புஞ்சை ஏக்கர் 1.88 செண்ட்கள், பின் வரும் எல்லைகள்: கிழக்கு-மறு சர்வே எண்.778/5 ஹரிஜன காலனி நிலம், வடக்கு - மறு சர்வே எண்.778/2 & மறு சர்வே எண்.800 முக்கிய வாய்க்கால், தெற்கு- மறு சர்வே எண்.776, மேற்கு-கன்னி வாய்க்கால், மேற்குறிப்பிட்ட எல்லைகளுக்குள் புஞ்சை ஏக்கர் 1.88 செண்ட்கள் பரப்பளவு 3512’ 14 ச.அடி பின் வரும் **எல்லைகள்; மேற்கு**-பொங்கலூர்காரர் நிலம், **கிழக்கு**-பரமேஸ்வரி நிலம் 2ஆவது தாக்கு தடம், **வடக்கு**-23 அடி அகல கிழக்கு-மேற்குலேஅவுட் சாலை, **தெற்கு**-பரமேஸ்வரி நிலம் 1ஆவது தாக்கு சொத்து, கிழக்கு-மேற்கு இருபுறமும் 55 3A அடி, தெற்கு வடக்கு இருபுறமும் 63 அடி, மேற்குறிப்பிட்ட எல்லைகளுக்குள் 3512’ A ச.அடி			

மேற்கூறிய கடன்தாரர்கள் மேற்கூறியவாறு எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு பணப்பட்டுவாடாச் செய்யத் தவறினால், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி, சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தும் விதிகளின் கீழ், செலவுகள் மற்றும் விளைவுகள் வகையில் மேற்கூறிய கடன்தாரர்(கள்) இன் முழுப் பொறுப்பில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும். கடன்தாரர்கள் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில், மேற்கூறியச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தின் விதிமுறைகள் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறும் அல்லது மீறத் தூண்டும் நபர், சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவாறு சிறைதண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கு உட்படுவார்.

நாள்: 19.00.2024
இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்காக

Edelweiss
Asset Reconstruction

கோவை அரசு மருத்துவமனையில்

உலக நோயாளிகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

Coimbatore Medical College and Hospital
Patient Safety Day

கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சார்பில் உலக நோயாளிகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது.

கோவை, செப். 19: உலக நோயாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 17-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில் நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சுகாதார பாதுகாப்பை மேம்படுத்துதல் ஊக்குவிக்கப்படுகிறது. நடப்பாண்டில், நோயாளிகளின் பாதுகாப்பிற்கான நோய் அறிதலை மேம்படுத்துதல் என்ற பொருளில் அனுசரிக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உலக நோயாளிகள் பாதுகாப்பு தின விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது. பேரணியை மருத்துவமனையின் டீன் நிர்மலா துவக்கி வைத்தார். மருத்துவமனை வளாகத்தில் நடந்த பேரணியில் டாக்டர்கள் கலந்துகொண்டு நோயாளிகளின் பாதுகாப்பு எங்களின் பொறுப்பு, நோயின் உண்மையை அறிவது தீர்வு உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பேனர்களை கையில் ஏந்தி நோயாளிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

தொண்டாமுத்தூர் அரசு கல்லூரியில்

அரசு வேலை வாய்ப்பு அறிமுக நிகழ்வு

தொண்டாமுத்தூர்,செப்.19: கோவை அருகே தொண்டாமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலை வாய்ப்பு மையத்தின் சார்பில் அரசுத் துறையில் வேலை வாய்ப்பு பற்றிய ஒரு அறிமுக நிகழ்வு நடைபெற்றது. இதில் வெலிங்டன் ராணுவ மைய பாதுகாப்புத் துறையில் நிதி ஆலோசகராக பணி புரியும் சத்யராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்திய அரசு துறையில் வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகள், குடிமைப் பணி தேர்வுகளுக்காக மாணவர்கள் எவ்வாறு தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அரசுத்துறையில் உள்ள வேலைவாய்ப்பு படிநிலைகளையும் மத்திய மற்றும் மாநில அரசுகளில் உள்ள பல்வேறு படி நிலைகளுக்கான பதவிகளில் எந்தவிதமான போட்டி தேர்வுகள் நடைபெறுகிறது.

மத்திய, மாநில அரசு பணிகளுக்கான போட்டித்தேர்வுகளை பற்றியும் அது வருடத்திற்கு எவ்வளவு முறை நடைபெறுகிறது என்பதையும் அதற்கு தேவையான தகுதி குறித்து விளக்கி கூறினார். குடிமைப் பணி தேர்வு நிலைகள் குரூப் ஒன்றிலிருந்து ஆரம்பித்து குரூப் நான்கு வரை உள்ளது என்பதை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். நிகழ்விற்கான ஏற்பாட்டை கல்லூரி வேலைவாய்ப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பிருந்தா ஒருங்கிணைத்தார்.

பெற்றோரால் கைவிடப்பட்ட

பச்சிளம் குழந்தை காப்பகத்தில் ஒப்படைப்பு

பொள்ளாச்சி, செப்.19: பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் நிறை மாத கர்ப்பிணி ஒருவர் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு கடந்த சில வாரத்திற்கு முன்பு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். தற்போது அந்த குழந்தை நல்ல நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.ஆனால் தனக்கு பிறந்த அந்த குழந்தையை வளர்ப்பதற்கு விருப்பம் இலலை என தங்கள் விருப்பத்தை பெற்றோர் தெரிவித்தனர். இந்நிலையில் பெற்றோரால் கைவிடப்பட்ட அந்த பச்சிளம் குழந்தையை சேலத்தில் உள்ள ஒரு காப்பகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெற்றோர்களால் கைவிடப்பட்ட ஆண் பச்சிளங்குழந்தை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலமாக நேற்று சேலம் லைப் லைன் டிரஸ்ட் காப்பகத்துக்கு, பச்சிளங்குழந்தை பிரிவு மருத்துவர்கள், செவிலியர்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

செங்குளத்தில் குவியும் கழிவுகள்

கோவை குனியமுத்தூர் செங்குளத்தில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளால் குளத்தின் நீர் மாசடைந்து வருகிறது.

கோவை, செப்.19: கோவை குனியமுத்தூர் செங்குளத்திற்கு நொய்யல் ஆற்றில் இருந்து நீர் வருகிறது. இந்த குளம் நிரம்பினால் உபரி நீர் வாய்க்கால் வழியாக குனியமுத்தூர் குளத்திற்கு நீர் திறக்கப்படுகிறது. தற்போது செங்குளம் சீரமைக்கப்படாமல் அசுத்தமான நிலையில் காணப்படுகிறது. இந்த குளத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த சில ஆண்டாக இந்த குளத்தின் கரையில் பல்வேறு கட்டுமான பொருட்கள், மருத்துவ பொருட்கள், காலாவதியான பொருட்கள் மற்றும் மயானத்தில் இருந்து அகற்றப்படும் துணி, பெட்சீட், படுக்கை, மெத்தை போன்றவைகள் குவிக்கப்பட்டு வருகிறது.

சிலர் இவற்றை தீ வைத்து எரித்து விடுகிறார்கள். பாலக்காடு ரோடு வழியாக செல்லும் பல்வேறு வகையான ஆயில், வேதி பொருட்களின் கழிவுகளையும் இந்த குளத்தின் கரையில் கொட்டி வருவதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குளக்கரைக்கு வாகனங்கள் செல்லும் பாதையை அடைக்க வேண்டும். கழிவு கொட்டும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நகரில் உள்ள 8 குளங்கள் சீரமைக்கப்பட்டது. ஆனால், நகரில் உள்ள செங்குளத்தை யாரும் கண்டுகொள்ளவில்லை. நொய்யல் ஆற்றின் பிரதான நீர் தேக்கமாக செங்குளம் இருக்கிறது. குனியமுத்தூர் பகுதிக்கான முக்கிய நிலத்தடி நீர் ஆதாரமாக இருந்தும் இங்கே கழிவு நீர் தான் அதிகமாக தேங்கியிருக்கிறது. குளத்தை சீரமைக்க வேண்டும். ஆகாய தாமரை மற்றும் முட்புதர்களை அகற்ற பொதுப்பணித்துறையினர் முன் வர வேண்டும் என குனியமுத்தூர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனைவியின் தங்கையை கர்ப்பமாக்கிய வடமாநில தொழிலாளி போக்சோவில் கைது

பொள்ளாச்சி,செப்.19: பொள்ளாச்சி அருகே உள்ள ஒரு நார்த் தொழிற்சாலையில் பீகார் மாநிலத்தை சேர்ந்த விகாஸ் குமார்(26) என்பவர் தனது மனைவியுடன் அங்கேயே தங்கி வேலை பார்த்து வசித்து வந்தார். அவர்களுடன் மனைவியின் 17 வயது தங்கையும் வசித்து வந்துள்ளார். சில மாதத்திற்கு முன்பு, விகாஸ் குமார் மனைவியின் தங்கையிடம் ஆசை வார்த்தை கூறி பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு அந்த சிறுமி திடீரென வாந்தி எடுத்துள்ளார்.

பின்னர் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்த போது, அவர் கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து பொள்ளாச்சி அனைத்து மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்து, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கர்ப்பமாக்கிய விகாஸ்குமாரை போக்சோவில் கைது செய்தனர்.

சுடுகாட்டில் மூதாட்டி சடலம் கண்டுபிடிப்பு

தொண்டாமுத்தூர்,செப்.19: கோவை அருகே இக்கரை போளுவாம்பட்டி சுடுகாடு காத்திருப்போர் கொட்டகை அருகில் துர்நாற்றம் வீசுவதாக தகவல் கிடைத்தது.இதை தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர் அமிர்தவல்லி ஆலாந்துறை போலீசில் புகார் செய்தார். சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து சென்று பார்த்தபோது அழுகிய நிலையில் பெண் சடலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.65 வயதான அந்த மூதாட்டி ஒரு மாதத்துக்கு முன்பு இறந்திருக்கலாம் என தெரிகிறது. சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட மூதாட்டி யார் எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விபரம் தெரியவில்லை. இதுகுறித்து ஆலந்துறை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN: U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது மாடி, என்.சி.கேல்கர் மார்க், கட்காரி சவுக், தாதர்(மேற்கு), மும்பை-400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com, தொலைபேசி: 044-24323033
அதிகாரப்பூர்வ அதிகாரி மொபைல் எண்.+91 9344684194/ +91 9884062068

[பிற்சேர்க்கை-IV-A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002(சர்ஃபாசி சட்டம்) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு
இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)& அடமான தாரர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி. லிட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பதை மின் ஏலம் மூலம் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) புல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் (ஒதுக்கீட்டு நிறுவனம்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமைமீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டு சொத்துகளை பெற்றுள்ளது. அதற்கிணங்க, **ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி. லிட்.,** உரிமைமீந்தோர் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் அதிகாரப்பூர்வ அதிகாரி நிலுவைகளை மீட்க கீழே குறிப்பிட்டுள்ள கடனீட்டு சொத்துகளை விற்பனை செய்ய எண்ணுகிறார். சர்ஃபாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள பத்திகளில் கடனீந்தோர் நிறுவனமான ஒஏஆர்பிஎல் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) களிடம் இருந்து மீட்பதற்காக **“உள்ளது உள்ளவிடத்தில்”, “உள்ளது உள்ளவாறு”**, மேலும் **“உள்ளது எதுவோ அது”** மற்றும் **“உதவிசாரா அடிப்படையில்”** விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)& அடமானதாரர்கள், செக்யூரிட்டீஸ், உரிமையாளர், நிலுவைத் தொகை, பிரிவு 13(2)ன்படி அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவுப்பு தேதி, கையப்படுத்தப்பட்ட தேதி, நிர்ணயவிலை, ஏல தொகை உயர்த்தும் தொகை, முன் வைப்பு தொகை (EMD), சொத்தை பார்வையிடுவதற்கான தேதி & நேரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. **ஏலதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுவதாவது, உதவி ஆணையர் (ST) வேலாண்டிபாளையம் சர்கிள், வணிக வரி துறை கட்டடம், கோயம்புத்தூர் 641018, இந்த சொத்தை திருமதி. A கமலா வணிக வரித்துறைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்காக 19.08.2015 மற்றும் 26.03.2024ல் பறிமுதல் செய்துள்ளார். இது விலங்க சான்றிதழிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தால் இந்த சொத்து அதற்கு முன்பே அடமான பதிவு ஒப்பந்தமாக ஆவண எண்.7218/2010 தேதி 28.12.2010ல் எஸ்ஆர்ஓ வடவள்ளியில் ஆவணபுத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்:திருமதி. A. கமலா க/பெ திரு.அனில்குமார் பிஷ்னாய் (கடன்தாரர்/அடமானதாரர்) மற்றும் திரு. அனில்குமார் பிஷ்னாய் (உப-கடன்தாரர்)

கடனீட்டு சொத்தின் விவரம்; கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கவுண்டம்பாளையம் கிராமம், எஸ். எஃப்.எண்.312/2B, வீட்டு மனை லேஅவுட் முன்னெடுக்கப்பட்டது. நகரமைப்பு திட்ட இயக்குனர் சென்னை என்ற அதிகாரியால் எண்.LP/D.T.C.P எண்.633/96ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஷாஜி லிபர்ட்டி கார்டன் என்ற பெயரில் இந்த மனை எண்.111 பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகள் கொண்டுள்ளது.
வடக்கு-23 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு-மனை எண்.106, கிழக்கு மனை எண்.112, மேற்கு-மனை எண்.110, இதற்கு நடுவே கிழக்கு-மேற்கு வடக்கு பகுதி 40 அடி, கிழக்கு-மேற்கு தெற்கு பகுதி 40 அடி, தெற்கு-வடக்கு கிழக்கு பகுதி 50 அடி, தெற்கு-வடக்கு மேற்கு பகுதி 50 அடி, அளவீடு 2000 ச.அடி அல்லது 4 செண்ட்கள் மற்றும் 258 ச.அடி அல்லது 185.80 ச.மீட்டர் காலி நிலம் அத்துடன் கட்டடம் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு கவுண்டம்பாளையம் மூன்றாம் நிலை முனிசிலாலிட்டியால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 868 ச.அடி ஆர்சிசி கட்டடம் தரைதளம் மற்றும் முதல் தளம் 129 ச.அடி போர்டிகோ அத்துடன் அனைத்து இணைப்புகள் தொடர்புகள் மற்றும் லேஅவுட் சாலைகளை உபயோகிக்கும் உரிமைகள் மற்றும் அனைத்து பொது பாதை வழி உரிமைகள் கொண்டுள்ளது. மின் இணைப்பு எண்.101-006-641. இந்த சொத்து கவுண்டம்பாளையம் முனிசிபாலிட்டியில் உள்ளது. இப்போது கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் வருகிறது.

சொத்தின் உரிமையாளர்	திருமதி.A.கமலா க/பெ திரு.அனில்குமார் பிஷ்னாய்
கோரிக்கை அறிவிப்பு தேதி	01.02.2022
கையக சுவாதீன தேதி	19.03.2024
நிர்ணயவிலை	Rs.65,50,000/ (ரூபாய் அறுபத்தி ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
முன் வைப்புத்தொகை	Rs.6,55,000/ (ரூபாய் ஆறுலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)
ஏலத்தொகை உயர்த்தும் அளவு	Rs.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
சொத்தை பார்வையிடுவதற்கான தேதி & நேரம்	24.09.2024 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை அதன் பின்னர் அதிகாரப்பூர்வ அதிகாரியை அவரது மொபைல் எண். 9344684194 ல் தொடர்பு கொண்டு முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்.
18.09.2024 தேதிய நிலுவைத் தொகை	Rs.80,07,367 (ரூபாய் எண்பது இலட்சத்து ஏழாயிரத்து முன்னூற்றி அறுபத்தி ஏழு மட்டும்)
கணக்கு விவரம்	கணக்கு எண்.344905000929 பயனாளர் பெயர்; ஓம்காரா PS22/2020-21 ட்ரஸ்ட், வங்கி பெயர்; ஐசிஐசிஐ வங்கி, கிளை; பந்த்ரா (கி), மும்பை ஐஎஃப்எஸ்சி குறியீடு; ICIC0003449
மின்-ஏலம் தேதி மற்றும் நேரம்	09 அக்டோபர் 2024 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
பங்கேற்பு ஏல கடிதம்/ KYC ஆவணம்/ முன்வைப்பு தொகை செலுத்தியதற்கான ஆவணம் ஆகியவற்றை சமர்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	7 அக்டோபர் 2024 அன்று அல்லது மாலை 4.00 மணிக்கு முன்னதாக

ஏலத்துக்கான நிபந்தனைகளை மற்றும் விதிகள்: விற்பனைக்கான விரிவான நிபந்தனைகளை மற்றும் விதிகளுக்கு தயவு செய்து கடன் நிறுவனத்தால் (ஒஏஆர்பிஎல்)கொடுக்கப்பட்ட இணையதளத்தை காணவும்; இணையதளம்; http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குனர் இணையதளம் https://www.bankeauctions.com

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 விதி 8(6) r/w 9(1) ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு
இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்குகளின் கடன்தாரர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 15 (பதினைந்து) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணம் செலுத்தத் தவறினால், சொத்து அதிகாரப்பூர்வ அதிகாரி /கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
மொபைல் எண்.9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020-21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 19.09.2024
இடம்: சென்னை